# எழுப்புதல் தொனி

EZHUPUTHAL THONI

தனிப்பிரதி: ₹ 5/- | ஆண்டு சந்தா: ₹ 60/-
Per Copy: ₹ 5/- | Annual subscription: ₹ 60/-



# உன்னைத் தேடும் உயிர்த்தெழுந்த இயேசு!

மலர்: 18 | Volume: 18 ஏப்ரல் 2022 | April 2022 இதழ்: 7 | Issue: 7





## அறுவடை பண்டிகை

முக்கந்தபூர் பணித்தளம் - இராயகடா மாவட்டம்



# உங்கள் சகோதரனிடமிருந்து...



**மரணத்தை ஜெயித்த இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துகள்!**

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு, தேவனுடைய பெரிதான கிருபையினாலும் இரக்கத்தினாலும் இந்த மாதத்தில் பத்திரிக்கை மூலமாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் சுகமாயிருக்கிறீர்களா? உங்கள் ஜெப வாழ்க்கையை முதலாவது ஒழுங்குப்படுத்துங்கள். நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது ஆண்டவர் உங்கள் உள்ளத்தை சமாதானத்தினால் நிரப்புவார். எல்லா சூழ்நிலையிலும் விசுவாசத்தில் உறுதியாயிருங்கள். ஏனென்றால், சாத்தான் எப்படியாகிலும் தேவனோடு உள்ள உறவை சிதைப்பதற்காகவே போராடுவான். ஆகவே, விசுவாசத்தின் மூலமாக அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்.

உங்கள் பிள்ளைகள் தேர்வுக்காக ஆயத்தப்பட்டுக் கொண்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன். தேவன் நிச்சயமாக உங்கள் பிள்ளைகளுக்கு ஜெயத்தைக் கொடுப்பார். உலக நாடுகளைப் பார்க்கும் போது சமாதானமில்லாமல் இருப்பதை நீங்கள் அறிவீர்கள். ஏனென்றால், இந்தக் காலம் கடைசியாய் இருப்பதினால் ஆண்டவர் இயேசுவின் வருகைக்கு முன்பாக சம்பவிக்கும் என்று சொன்ன தீர்க்கதரிசனங்கள் நிறைவேறி வருகிறது. யுத்தங்கள், பஞ்சம், கொள்ளை நோய் எல்லாம் ஒரே நேரத்தில் உலக நாடுகளில் சம்பவித்து வருகிறது. எனவே ஆண்டவர் இயேசுவின் வருகை சமீபமாயிருக்கிறது. ஆகவே, எப்பொழுதும் விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள். நான் உங்களுக்காக நம்முடைய கல்வாரி குடும்பத்தோடு இணைந்து கருத்தாய் ஜெபிக்கிறேன். தேவனுடைய கிருபை உங்களோடு இருப்பதாக!

எழுப்புதல் பணியில்,

T A8 Gn

**(T.ஆசீர் ஞானராஜ்)**

வங்கியின் மூலமாக பணம் அனுப்பும்போது தயவுசெய்து எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
**94865 88270**

24 மணி நேர ஜெப உதவிக்காக:
**94869 19522, 81909 25800**
**ஊழிய விபரங்களுக்கு: 94865 88270**
Email: calvarygospelmm@gmail.com

Follow us youtube channel:
**Asir Gnanaraj**

**https://www.youtube.com/channel/UCOKkrVUWceMTwtC2dKOl4zg (or)**




**மூன்றாந்தரம் அவர் அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னை நேசிக்கிறாயா என்றார். என்னை நேசிக்கிறாயா என்று அவர் மூன்றாந்தரம் தன்னைக் கேட்டபடியினாலே, பேதுரு துக்கப்பட்டு: ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேகிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர் என்றான். இயேசு: என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார். யோவான் 21:17**

## தீர்க்கதரிசன செய்தி: சகோ. T.ஆசீர் ஞானராஜ்

பிரியமானவர்களே, இயேசு இந்த பூமியிலே சுற்றித்திரிந்த நாட்களிலே அவருக்கு ஏராளமான சீஷர்கள் இருந்தார்கள். இயேசுவுக்கு 500க்கும் மேற்பட்ட சீஷர்கள் இருந்தார்கள் என்று வேத ஆராய்ச்சி சொல்லுகிறது. ஆண்களும் பெண்களுமாக அவரை பின்தொடர்ந்தார்கள். அதிலே எழுபது பேரை பிரித்தார். அதிலும் பன்னிரெண்டு பேரை தன்னோடு கூடவே இரவும் பகலும் இருக்கும்படியாக பிரித்தெடுத்தார். அவர்கள் இயேசுவோடு கூடவே இருந்தார்கள்.

இயேசு சீஷர்களோடு கூட இருந்தார். கூடவே இருக்கும்படி பன்னிரெண்டு பேரை தெரிந்து கொண்டார். அதிலும் மூன்று பேரை தனியாக பிரித்தார். யோவான், யாக்கோபு, பேதுரு இந்த மூன்று பேரை ஆண்டவர் இயேசு அவருடைய ஜெப நண்பர்களாக தெரிந்து கொண்டார். தெய்வம் இந்த பூமியிலே மனிதனாய் இருந்தபோது அவருக்கு மிகவும் பிரியமானவர்களிடத்தில் தனது உள்ளத்தில் உள்ள எல்லா ரகசியங்களையும் வெளிப்படுத்தும்படிக்கு அல்லது தன்னுடைய எல்லா காரியங்களையும், துக்கங்களையும், வேதனைகளையும் பகிர்ந்து கொள்ளும்படியாக அதிலே தேவன் மூன்று பேரை தெரிந்து கொண்டார். அதில் ஒருவனாக

இந்த பேதுரு காணப்பட்டான். இயேசு ஏன் இந்த சீஷனை பார்த்து என்னை நேசிக்கிறாயா என்று கேட்க வேண்டும். பாவிகள் கையில் மனுஷகுமாரன் ஒப்புக்கொடுக்கப்படுவான் என்று சொன்னபடியே அவர் தன்னை தாமாகவே இந்த முழு உலகத்திற்காக ஒப்புக்கொடுத்தார். அதினிமித்தமாகவே அந்த நாட்களிலே இயேசுவை பிடித்து சிலுவையில் அறைந்து கொலை செய்தார்கள். இயேசு கெத்சமனே தோட்டத்திலே விரோதிகளாலே கைது செய்யப்பட்ட போது சீஷர்கள் இயேசுவை விட்டு ஓடிப்போனார்கள். இயேசு தனிமையாக அந்த சிலுவையை நோக்கி கடந்து போனார். ஆனால் சில சீஷர்கள் இயேசுவுக்கு என்ன சம்பவிக்குமோ என்பதை பார்க்கும்படிக்கு இயேசுவை பின்தொடர்ந்தார்கள். ஆனாலும் இயேசு பேதுருவினுடைய நடக்கைகளை முன்னமே அறிந்திருந்தபடியினால் ***இயேசு அவனை நோக்கி: இந்த இராத்திரியிலே சேவல் கூவுகிறதற்கு முன்னே, நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்– மத்தேயு 26:34.*** ஆனால் அந்த சமயத்திலே பேதுரு உணர்ச்சிவசப்பட்டான். ***அதற்கு அவன்: ஆண்டவரே, காவலிலும் சாவிலும் உம்மைப் பின்பற்றிவர, ஆயத்தமாயிருக்கிறேன் என்றான். – லூக்கா 22:33*** இதை வைராக்கியமாக சொன்னான். ஆனால் அந்த வைராக்கியம் சில மணி நேரத்திற்குள்ளாகவே முடிவுக்கு வந்து விட்டது. அதே போல இயேசு கைது செய்யப்பட்டார். சனகெரிப் என்ற நீதிமன்றத்திற்கு கொண்டு போகப்பட்டார். அதின் முற்றத்திலே எல்லாருக்கும் முன்பாக இயேசுவை பேதுரு மூன்று விசை மறுதலித்தான். அவன் சபிக்கவும் சத்தியம் பண்ணவும் தொடங்கினான். அவன் இயேசுவை விட்டு விலகி விட்டான். இயேசுவை மறுதலித்து விட்டான். அவர் யாரென்று எனக்குத் தெரியாது. அவரோடு என்னை எதற்கு இணைத்து பேசுகிறீர்கள் அவரை எனக்குத் தெரியவே தெரியாது என்று இயேசுவை விட்டு விலகினான். மூன்றரை ஆண்டுகள் இயேசுவோடு உண்டு உறங்கி அவரோடு கூட வாழ்ந்த பேதுரு இயேசுவை யாரென்றே தெரியாது என்றான்.

இயேசு எருசலேமிலே சிலுவையிலே அறையப்பட்டு குற்றுயிராய் தொங்கிக்கொண்டிருக்கும் போது கலிலேயாவிலிருந்து இயேசுவை பின்தொடர்ந்து வந்த அவருடைய சீஷர்கள் ஸ்திரீகள், புருஷர்கள் எல்லாரும் தூரத்திலே நின்று இதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

***அவருக்கு அறிமுகமானவர்களெல்லாரும், கலிலேயாவிலிருந்து அவருக்குப் பின்சென்று வந்த ஸ்திரீகளும்தூரத்திலேநின்றுஇவைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். – லூக்கா 23:49*** அவருக்கு அறிமுகமான எல்லாரும் இயேசுவை விட்டு தூரமாய் போனார்கள். இயேசுவை விட்டு பிரிந்து நின்றார்கள். ஆகவே இயேசு தனித்தவராய் சிலுவையிலே தொங்கினார். யார் இயேசுவை மறுதலித்தார்களோ, யார் இயேசுவை விட்டு

ஓடிப்போனார்களோ அவர்களை இயேசு உயிர்த்தெழுந்த பின்பு தேடிப் போனார். இவர் யாரென்று தெரியாது என்று சொன்ன அதே சீஷர்களைத் தேடி இயேசு போனார். பேதுரு பின்பிடிக்கிற தொழில் செய்கிறவனாய் இருந்த படியினாலே நான் மீன் பிடிக்கப்போகிறேன் என்று சொன்னவுடனே சில சீஷர்கள் நாங்களும் உம்மோடே வருகிறோம் என்று சொல்ல அவர்களையும் அழைத்துக்கொண்டு இரவிலே அவன் மீன் பிடிக்க போனான். மீன்பிடிக்கப்போய் வெறுமையாய் திரும்பி வந்தான். கரையை நோக்கி வந்து கொண்டிருக்கும் போது கடற்கரையிலே ஒருவரைப் பார்க்கிறான். அங்கே கரி நெருப்பு அடுப்பு எரிந்து கொண்டிருக்கிறது. ஒருவர் அங்கே நின்று கொண்டிருக்கிறார். உற்று கவனித்துப் பார்த்தால் அவர் உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு. அவர் கர்த்தர் என்று சொல்லி, அவன் வஸ்திரமில்லாதவனாய் இருந்த படியினாலே அவன் கடலிலே குதித்தான் என்று வேதம் சொல்லுகிறது. இயேசு அவனையும் சீஷர்களையும் அன்போடு அழைத்தார். தன்னை விட்டு ஓடிப்போன சீஷர்களுக்காக இயேசு கடற்கரையில் அவர்கள் பசியோடு இருக்கிறார்கள் என்பதை அறிந்து அவர்களுக்காக அவரே சமையல் செய்து சீஷர்களுக்காக அன்பு நிறைந்த ஆண்டவர் காத்துக்கொண்டிருந்தார். அது தான் இயேசுவினுடைய அன்பு. அதை சீஷர்களுக்கு பிட்டு கொடுத்தார். எல்லாரும் அமர்ந்து சாப்பிட்டார்கள். சாப்பிட்ட பின்பு தனியாக உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்த பேதுருவினிடத்தில் இயேசு கடந்து போய் அருகில் அமர்ந்து அவன் மீது கைகளை போட்டுக்கொண்டு சீமோனே நீ என்னை இவர்கள் எல்லாரையும் விட அதிகமாய் நேசிக்கிறாயா என்று கேட்டார். எந்த ஒரு பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் இந்த உலகத்திலே உங்களுக்காகவும் எனக்காகவும் வந்தவர் ஆண்டவர் இயேசு கிறிஸ்து. இந்த உலகத்தில் இருக்கிற அத்தனை இரத்த சொந்தங்களும் உறவுகளும் ஏதோ ஒரு காரியத்தை உங்களிடத்திலே எதிர்பார்த்து அவர்கள் பின்னிப்பிணைந்திருக்கிறார்கள். அதன் மத்தியில் தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால்


WANTED

# முன்னேற்றப் பணியாளர்கள் தேவை

**அர்ப்பணிப்புள்ள ஊழியஞ்செய்ய**

**வாஞ்சையுள்ள சகோதர சகோதரிகள் தேவை.**

**முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.**

**திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.**

**தொடர்புக்கு: 9486588270,9486919522.**

*எதையுமே எதிர்ப்பார்க்காமல் எந்த பிரதிபலனையும் பாராதபடிக்கு ஒருவர் உங்களை நேசிப்பதுண்டானால் அவர் இயேசு கிறிஸ்து மாத்திரமே. நீங்கள் எவ்வளவு தூரம் போனாலும் உங்களுக்கு பின்னாக உங்களை பின்தொடர்ந்து கொண்டிருக்கிறவர் இயேசு. நீங்கள் இந்த இயேசுவே வேண்டாம் என்று படுக்கையில் கிடந்தாலும் படுக்கையின் அருகிலே காத்துக்கொண்டிருக்கிறவர் ஆண்டவர் இயேசு. அவர் அன்புள்ள ஆண்டவர். உண்மையுள்ள ஆண்டவர். தன்னைக் காட்டிக்கொடுத்த யூதாஸ்காரியோத்து அவன் காட்டிக்கொடுப்பான் என்பதை முன்பே அறிந்திருந்தார். அவன் இருதயம் உலகத்தின் தேவை நிமித்தமாக, பொருளாசையினால் நிறைந்திருக்கிறது என்பதை அறிந்தார்.*

**ஊழியத்திற்கு வந்திருந்த ஆரம்ப காலத்திலே ஒருநாள் கிராம ஊழியத்திற்காக நான் சென்றிருந்தேன். பேருந்தை விட்டு நான் இறங்கியவுடன் ஏழு எட்டு பேர் என்னோடே கூட இறங்கினார்கள். நான் அந்த கிராமத்திற்கு வழக்கமாக ஊழியத்திற்கு செல்வேன். இவன் இயேசுவை குறித்து சொல்லக் கூடியவன் என்பதை அவர்கள் அறிந்து வைத்திருந்தவர்கள். அது ஒரு மே மாதம் நல்ல வெயில் காலம். அதனால் கையில் குடையைப்பிடித்துக்கொண்டு அந்த கிராமத்திற்கு நடந்து சென்றேன். அந்த கிராமம் மூன்று கிலோ மீட்டர் தள்ளி இருக்கிறது. அந்த ஜனங்கள் என் பின்னால் வருகிறார்கள். நான் முன்பக்கம் போக போக எனக்கும் அவர்களுக்கும் நான்கு அடி தூரம் தான் இருக்கும். என்பின்னால் நடந்து வருகிறார்கள். எவ்வளவு என்னை திட்ட முடியுமோ அவ்வளவு என்னை திட்டினார்கள். இப்படி சோம்பேறியாக வாழ்வதற்கு செத்து தொலையலாமே என்று கடைசியாக சொன்னார்கள். சோம்பேறியாக இருந்துகொண்டு உழைத்து சம்பாதிக்கிறவர்களின் பணத்தை வாங்கி சாப்பிடுவதற்கென்றே ஒரு கூட்டம் அலைகிறதே என்று சொன்னார்கள். இப்படி அநேக வசைமொழிகளை பாடினார்கள். நல்ல வேலையிலிருந்து இருந்து நான் ஆண்டவர் பின்னே கடந்து வந்ததினாலே என்னுடைய உள்ளமானது மிகவும் தடுமாற்றமடைந்தது. அந்த நாள் ஊழியமும் தோல்வியிலே முடிந்து விட்டது. என்னால் ஊழியம் செய்யவே முடியவில்லை. நான் வீட்டிற்கு திரும்பி வந்து ஆண்டவரிடம் நான் ஊழியம் செய்ய மாட்டேன் என்று சொன்னேன். நான் வேலை செய்து கொண்டே ஊழியம் செய்யப் போகிறேன். எனக்கு இது அவமானமாய் இருக்கிறது என்று சொன்னேன். அப்பொழுது ஆண்டவர் என்னிடம், மகனே நான் அந்த வழியில் தானே சென்றேன். ஒரு தெய்வம் நானே காணிக்கை வாங்கித்தானே சாப்பிட்டேன் என்றார். நானோ இல்லை ஆண்டவரே முடியாது எனக்கு மிகவும் கேவலமாக இருக்கிறது. நான் எதுவும் செய்யமாட்டேன் என்று சொன்னேன். ஆண்டவர் எனக்கு ஒரு தரிசனத்தை காண்பித்தார். அந்த தரிசனத்தில் ஏராளமான பணங்களை என்னுடைய பை நிறைய வைத்திருக்கிறேன். எல்லாவற்றையும் அள்ளிக்கொண்டு அதற்கு மேல் அள்ளி எடுத்து எதிலும் வைக்க முடியாது என்று தெரிந்து என் கை இரண்டிலும் அள்ளிக்கொண்டு ஒரு தனித்த குறுகலான பாதையிலே ஒரே மனிதன் நடக்கக் கூடிய**

**பாதையில் நடக்கிறேன். நான் நடந்து போகும் போது அந்த பணத்தை கையில் வைத்துக்கொண்டு நிற்கிறேன். அப்போது பரத்திலிருந்து சத்தம் கேட்கிறது. மகனே ஆசீர் என்று மூன்று விசை சத்தம் கேட்கிறது. உனக்கு இந்த உலகம் வேண்டுமா இல்லை நான் வேண்டுமா என்று பரலோகத்திலிருந்து பெரிய சத்தம் கேட்கிறது. அப்பொழுது நான் அழுது கொண்டே இந்த பணமெல்லாம் வேண்டாம் எனக்கு நீங்கள் தான் வேண்டும் என்று சொல்லி பணத்தையெல்லாம் அள்ளி எறிந்து விட்டு நான் இயேசுவின் பின்னால் போனது போல தரிசனம் கண்டு விழித்தேன். அதைப் போல மறுநாள் ஊழியத்தை செய்ய கர்த்தருக்காக என்னை நான் முற்றிலும் ஒப்புக்கொடுத்தேன்.**

*பிரியமானவர்களே, இயேசுவை பின்பற்றி வந்த இயேசுவோடு இருந்த சீஷர்களில் ஒருவன் உலக சிந்தையுள்ளவனாய் மாறினான். அவனுக்கு தேவை வந்த போது அந்த பணத்தை எப்படி சுதந்தரிக்கலாம் என்று அவன் உள்ளம் போராடிற்று. இயேசு இல்லாமல் அந்த பணத்தை நான் சுதந்தரிக்க வேண்டும் அதற்கு என்ன வழி? அந்த சமயத்தில் இயேசுவை காட்டிக்கொடுக்கிறவர்களுக்கு தகுதியான சன்மானம் கொடுக்கப்படும் என்ற அறிக்கை பிரதான ஆசாரியனுடைய அறையிலிருந்து வருகிறது. நாம் ஏன் காட்டிக்கொடுத்தால் என்ன? அந்த முப்பது வெள்ளிக்காசு நம்முடையதாய் மாறுமே என்ற சிந்தை வந்ததினால், அவர்களை தேடி யூதாஸ் கடந்து போனான். சிந்தித்துப்பாருங்கள். இயேசுவை ஏன் காட்டிக்கொடுக்க வேண்டும். அவர் எப்போதும் எல்லா இடங்களிலும் சுற்றித்திரிந்து கொண்டு தானே இருக்கிறார். ஜனங்களுக்கு முன்பாக இயேசுவை கைது செய்ய முடியாது. ஏனென்றால் ஜனங்களில் அநேகர் இயேசுவை நேசிக்கிறார்கள். ஆகவே இரவிலே இயேசுவை கைது செய்ய அங்கே இயேசுவோடு கூட இருக்கக் கூடிய யாக்கோபு இயேசுவின் சாயலாகவே இருந்த படியினாலே இருவரும் உருவ ஒற்றுமை உள்ளவர்களாய் இருந்தபடியினாலே இயேசுவை கைது செய்யும் போது ஆள் மாறாட்டம் நடந்து விடக் கூடாது அதற்காக பணம் செலவு செய்தாலும் பரவாயில்லை சரியான படி அந்த காரியத்தை செய்து முடிக்க வேண்டுமென்று ஆசாரியர் கூட்டம் தீர்மானித்திருந்தது. யூதாஸ் போன போது முப்பது வெள்ளிக்காசுக்கு பேரம் பேசி முடித்து விட்டார்கள். அவனுடைய உள்ளத்திலே அநீதியான பணத்தை விரும்பி அதை செய்ய அவன் தீர்மானித்திருந்த காலத்தில் இயேசு மறைவாக தீர்க்கதரிசனமாக சொல்லிக்கொண்டேயிருந்தார். உங்களில் ஒருவன் என்னை காட்டிக்கொடுப்பான் என்று இயேசு மறைவாக அவன் மாத்திரம் அறிந்து கொள்ள வேண்டுமென்று மற்றவர்களுக்கு முன்பாக அவனை காட்டிக்கொடுக்காமல் நல்ல எண்ணத்தோடு கூட அவன் மனம் மாறுவான் என்ற ஒரு தருணத்தை அவனுக்குக் கொடுத்து காத்துக்கொண்டிருந்தார். ஆனால் யூதாசுடைய இருதயம் இயேசுவின் பக்கம் வரவேயில்லை. முடிவாக குறித்த நாளிலே இயேசுவை நான் காட்டிக்கொடுப்பேன்*

என்று பேரம் பேசி அவன் தீர்மானம் எடுத்த போது தான் திட்டமாக என்னோடு தாலத்திலே கையிடுகிறவன் எவனோ அவனே என்னைக் காட்டிக் கொடுப்பான் என்று இயேசு சொல்லுகிறார். பின்பு அவனைப் பார்த்து நீ ஏன் இங்கே இருந்து பணத்தை நினைத்து ஏங்கி தவிக்க வேண்டும் போ நீ செய்ய வேண்டியதை சீக்கிரமாய் செய் என்று சொன்னார். மற்ற சீஷர்கள் அனைவரும் பணப்பை அவன் கையில் இருக்கிறபடியினால் அவனை ஏதோ ஒரு காரியத்தை செய்யும்படிக்கு அனுப்புகிறார் என்று தான் எண்ணினார்கள். அந்த அளவிற்கு ரகசியம் காக்கப்பட்டது. இயேசு இப்பொழுது கெத்சமனே தோட்டத்திலிருக்கிறார். அவருக்கு பிரியமான சீஷர்கள் மூன்று பேர் அங்கிருக்கிறார்கள். பிரதான ஆசாரியர்கள் சேவகர்களோடு கூட இயேசுவை கைது செய்யும்படிக்கு கெத்சமனே தோட்டத்திற்குள்ளே இயேசு எப்போதும் ஜெபிக்கிற இடத்தை அறிந்திருந்த யூதாஸ் அங்கே தீவட்டிகளோடு வருகிறான். அந்த இடத்தில் வந்த போது இவர் தான் இயேசு என்று அவன் காட்டிக் கொடுத்து ஒரு பாவத்தை செய்துவிடக் கூடாது என்பதற்காக அவர்கள் வருவதை அறிந்த இயேசு இதோ வேளை வந்து விட்டது என்று அவரோடு இருந்த சீஷர்களிடத்தில் சொல்லி தான் ஜெபித்துக்கொண்டிருந்த இடத்திலிருந்து எழுந்து **இயேசு தமக்கு நேரிடப்போகிற எல்லாவற்றையும் அறிந்து எதிர்கொண்டு போய், அவர்களை நோக்கி: யாரைத் தேடுகிறீர்கள் என்றார். அவருக்கு அவர்கள் பிரதியுத்தரமாக: நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம் என்றார்கள். அதற்கு இயேசு: நான்தான் என்றார். அவரைக் காட்டிக்கொடுத்த யூதாசும் அவர்களுடனேகூட நின்றான். – யோவான் 18:4,5.** யூதாஸ் காட்டிக்கொடுத்து ஒரு பாவத்தை செய்ய வேண்டாம் அவன் என் பிள்ளை அவன் என்னை காட்டிக்கொடுத்து பாவம் செய்யக் கூடாது என்பதற்காக தன் சீஷனை காக்கும்படிக்கு நசரேயனாகிய இயேசு நான் தான் என்னைத் தேடினால் என்னைக் கைது செய்யுங்கள் என்று சொன்னார். ஆனாலும் அவன் இயேசுவின் அருகில் வந்து முத்தமிட்டுக் காட்டிக்கொடுத்தான். இயேசு எவ்வளவு அன்புள்ளவர் என்பதை உணர்த்தும்படியாகத் தான் இதை எழுதுகிறேன்.

பிரியமானவர்களே, இந்த இயேசு ஒரு மனிதரிடத்திலே எதிர்பார்க்கிறது என்ன? எந்த பிரதிபலனையும் எதிர்பாராமல் இயேசுவை உண்மையாக நேசிக்கக் கூடியவன் யார்? இயேசுவினிடத்தில் வந்தால் எனக்கு அது கிடைக்குமா இது கிடைக்குமா என்று ஒரு கூட்டம் பேர் இயேசுவின் பின்னாக சுற்றித்திரிந்து கொண்டிருந்தார்கள். **இயேசு அவர்களுக்குப் பிரதியுத்திரமாக: நீங்கள் அற்புதங்களைக் கண்டதினால் அல்ல, நீங்கள் அப்பம் புசித்துத் திருப்தியானதினாலேயே என்னைத் தேடுகிறீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். – யோவான் 6:26** உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசுவை பார்த்து சீஷர்களில் ஒருவன் கேட்கிறான். ஆண்டவரே இக்காலத்திலா ராஜ்யத்தை நீர்

இஸ்ரவேலுக்கு கொடுப்பீர். நீர் எப்போது ராஜாவாக மாறுவீர் நாங்களெல்லாம் எப்போது மந்திரியாக மாறுவோம் என்று கேட்கிறான். இயேசுவுக்கு பின்னாக சென்ற ஒவ்வொரு சீஷர்களின் எண்ணமும் ஒவ்வொரு விதமாக இருந்தது. **இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர் களாயிருப்போம். – 1கொரி.15:19** என்று வேதம் சொல்லுகிறது. இந்த அற்ப உலகத் தேவைக்காகவா நாம் இயேசுவை பின்தொடர வேண்டும். அந்த தேவை நம்முடைய வாழ்க்கையில் நிறைவேற அல்லது ஆண்டவர் கொடுக்க தாமதிக்கும் போது இந்த இயேசு வேண்டாம் என்று உதறுகிறோம். வேதவசனம் கசந்து போகிறது. உபவாசம் இல்லை. ஜெபம் இல்லை வேத தியானமே இல்லை. ஏதோ கிறிஸ்தவனாய் இருக்கிறேன் அதனால் ஆராதனைக்கு சென்று பங்கெடுக்கிறேன். இயேசு எனக்கு ஏன் கொடுக்கவில்லை. அவனு(ளு)க்கு கொடுத்திருக்கிறார் எனக்கு ஏன் கொடுக்க வில்லை? அப்படியானால் அந்த இயேசு வேண்டாம் என்று நினைக்கிறோம். இந்த பொல்லாத அநீதி நிறைந்த உலகத்தில் அன்பில்லாத உலகத்தில் இயேசு அன்புள்ளவராக அன்பின் நிறைவாக வெளிப்பட்டார். அதே அன்பை உங்களிடத்திலும் என்னிடத்திலும் ஆண்டவர் எதிர்பார்க்கிறார். ஆண்டவர் கேட்பதையும் தருவார் கேளாததையும் தருவார் ஆனால் ஆண்டவர் எதிர்பார்க்கிறது என்ன? உண்மையான அன்பு. எது கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் எனக்கு இயேசு தான் வேண்டும் என்ற உண்மையான இருதயத்தை இயேசு இன்றைக்கு தேடிக்கொண்டிருக்கிறார்.

**இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார். – லூக்கா 19:10** எவ்வளவு பெரிய மகத்துவமான தெய்வம். எதை அவர் இழந்து போனார்? ஆதியிலேயே மனிதனுடைய அன்பை அவர் இழந்தார். ஏதேனிலே மனிதன் தேவனை மறுதலித்தான். தேவன் விலக்கின விருட்சத்தின் கனியை பறித்து புசித்து பாவம் செய்தான். மனுக்குலம் பாவத்திற்குள்ளாக்கப்பட்டது. அன்பே உருவான தெய்வம் தன்னிடம் அன்பு காட்டும்படிக்கு மண்ணிலே அவர் செய்த பிள்ளைகள் அவரை வெறுத்து தன்னை உண்டாக்கின மெய் தேவனை மறந்து அற்ப விருட்சத்தின் கனிக்காக சாத்தானாலே வஞ்சிக்கப்பட்டு மகிமையான தெய்வத்தை விட்டு விலகி அந்த விருட்சத்தின் கனியை பறித்து புசித்து பாவம் செய்ததினால் மனுக்குலம் முழுவதுமே பாவத்திற்குள்ளே சாத்தானாலே அடைக்கப்பட்டது. பாவம் செய்யாமல் மனிதன் வாழ முடியாது என்ற பிரமாணத்திற்கு கீழே அடைக்கப்பட்டார்கள். அந்த கீழ்ப்படியாமையின் ஆவியினால் ஒரு பிள்ளை கர்ப்பந்தரித்து இந்த உலகத்திலே வெளிப்படும் நாளிலே அது பாவம் செய்யக் கூடிய சுபாவம் உள்ளதாகவே வெளிப்படுகிறது. அதைப் பார்த்த தெய்வம் மனிதனாக இந்த உலகத்தில் அவதரித்து மறுபடியும் அவனை உயிர்ப்பிக்கும்படியாக

அவர் ஜீவனை சிலுவையில் ஒப்புக்கொடுத்தார். எந்த மரத்தினாலே ஒரு மனிதன் பாவம் செய்தானோ அதே மரத்தை இயேசு தோள் மேலே சுமந்து அதே மரத்திலே அறையப்பட்டு இரத்தத்தை அந்த மரத்திலே ஊற்றி மனுக்குலம் முழுவதையும் அவருடைய அன்பினாலே மீட்டுக்கொண்டார். அவருக்கும் நமக்கும் உள்ள இந்த உறவு எப்படி உண்டானது? இந்த உறவு எப்படிப்பட்டது? முன்னே அந்தகாரத்திற்குள்ளே இருளுக்குள்ளே இருந்தோம் இப்போது அவருடைய பிள்ளைகளாக இருக்கிறோமே இந்த உறவு எப்படிப்பட்டது? இது இரத்தத்தில் உண்டான உறவு. இந்த உறவுக்காக இரத்தம் சிந்தப்பட்டிருக்கிறது. கொஞ்சம் அல்ல. ஒரு சொட்டு இரத்தமில்லாமல் ஊற்றப்பட்டிக்கிறது. இயேசுவுக்கு அன்பாக இருந்த சீஷர்கள் மூன்று பேர் அதிலும் இயேசு நேசித்த சீஷன் ஒருவன். ஆனால் இவர்களையெல்லாம் கடந்து தான் இயேசு உயிர்த்தெழுந்தவுடனே முதலாவது ஏன் ஒரு ஸ்திரீக்கு தரிசனமாக வேண்டும். தியானிப்போம்.

***வாரத்தின் முதல்நாள் காலையில், அதிக இருட்டோடே, மகதலேனா மரியாள் கல்லறையினிடத்திற்கு வந்து கல்லறையை அடைத்திருந்த கல் எடுத்துப் போட்டிருக்கக்கண்டாள். உடனே அவள் ஓடி, சீமோன் பேதுருவினிடத்திலும் இயேசுவுக்கு அன்பாயிருந்த மற்ற சீஷனிடத்திலும் போய்: கர்த்தரைக் கல்லறையிலிருந்து எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள், அவரை வைத்த இடம் எங்களுக்குத் தெரியவில்லை என்றாள். – யோவான் 20: 1–2***

இப்போது பேதுருவும் யோவானும் கல்லறையினிடத்திற்கு போட்டிபோட்டுக்கொண்டு ஓடுகிறார்கள். இரண்டு பேரும் ஓடினதிலே யோவான் பேதுருவுக்கு முந்தி ஓடுகிறான். கல்லறையின் முன்பாக போய் நின்று விட்டான். பின்னே ஓடி வந்த பேதுரு அவனுக்கு முன்பாக கல்லறைக்கு உள்ளே போய் பார்த்தான் இயேசுவின் சரீரத்தை சுற்றி இருந்த சீலை தனியாக இருந்தது. தலையை சுற்றியிருந்த துணி தனியே வைக்கப்பட்டிருந்தது. அவர்கள் இயேசு உயிர்த்தெழுந்தார் என்பதை முழுமையாய் அறியாதவர்களாய் அந்த இடத்தை விட்டு போய் விட்டார்கள். ஆனால் அவர்கள் போன பிறகும் இந்த மகதலேனா மரியாள் கல்லறையில் நின்று கொண்டிருக்கிறாள். முதலாவது அவள் வரும்போது ஒருசில ஸ்திரீகளோடுகூட அவள் வந்தாள். இயேசுவின் சரீரம் அங்கே இல்லை என்பதை சீஷர்களுக்கு சொல்ல போகும் போது அந்த இரண்டு சீஷர்களுக்கு பின்னாக மகதலேனா மரியாள் வந்தாள். மற்ற ஸ்திரீகள் அங்கே நின்று விட்டார்கள். சீஷர்கள் இருவரும் சென்று விட்டார்கள்.

மகதலேனா மரியாள் அந்த கல்லறையின் அருகிலே தனியே நின்று அழுது கொண்டேயிருந்தாள். இயேசு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். இயேசுவை கல்லறையில் வைத்த நாள் ஓய்வுநாளினுடைய ஆயத்தநாளாயிருந்தது. ஆகவே இந்த இரண்டு நாட்கள் கடந்து செல்ல வேண்டும். மூன்றாம் நாள் இயேசுவினுடைய கல்லறைக்கு போக வேண்டும். யூத முறைப்படி அவர்கள் வாசனை

திரவியங்களை கொண்டு போய் அந்த சரீரத்தில் வாசனை திரவியத்தை ஊற்றுவார்கள். ஆனால் ஓய்வு நாளுக்கு முந்தைய ஆயத்தநாளிலே ஒருவன் ஓய்வு நாள் பிரயாண தூரத்தை கடந்து சென்றால் அவன் நியாயப்பிரமாண சட்டத்தின்படி கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும். ஆச்சாரம் மிகுந்த எருசலேம் என்ற புண்ணிய பூமியிலே அவர்கள் இருந்தார்கள். அங்கே ஓய்வு நாள் பிரயாண தூரத்தை கடந்து போனால் அவர்கள் பிடிக்கப்படும் வேளையில் கல்லெறிந்து கொல்லப்படுவார்கள். ஆகவே அந்த ஒழுங்கு முறைக்கு கட்டுப்பட்டவர்களாக மூன்றாம் நாள் வரும் வரைக்கும் மகதலேனா மரியாள் அவளோடிருந்த சில ஸ்திரீகள் காத்துக்கொண்டு இரவெல்லாம் தூங்காமல் அழுதுகொண்டேயிருந்தார்கள். மகதலேனா மரியாள் அதிக இருட்டோடே எழுந்து கல்லறைக்கு போனாள் என்று வேதம் சொல்லுகிறது. நாமெல்லாரும் நன்றாக தூங்கிக்கொண்டிருக்கிற நேரம் அது.

மூன்று மணியிலிருந்து நான்கு மணிக்குள்ளாக அதிக இருட்டோடே அவள் எழுந்து சில ஸ்திரீகளாக கல்லறையினிடத்திற்கு போனாள். கல்லறை திறந்திருந்தவுடனே அவர்கள் பயத்தோடே திரும்பி ஓடி வந்தார்கள். எல்லாரும் போய்விட்டார்கள். ஆனால் மகதலேனா மரியாள் கல்லறையினிடத்திலே அழுது கொண்டிருந்தாள். உள்ளே போய் பார்த்து இயேசு இல்லை என்பது தெரிந்து விட்டது அவள் வீட்டிற்கு போய் விடலாமே இன்னும் ஏன் அவள் அங்கு நிற்க வேண்டும்? இயேசுவோடு தானே ஊழியத்திற்காக புறப்பட்டு வந்தோம். மகிமையான ஊழியத்தை செய்து விட்டு திரும்புவோம் என்று நினைத்தோமே இன்றைக்கு என் இயேசு இல்லாமலே வெறுமையாய் நான் போக வேண்டுமா என்று அவள் உள்ளம் துடிதுடித்தது. மறுபடியும் அவள் குனிந்து கல்லறையின் உள்ளே பார்த்தாள். அங்கே அப்பொழுது சீஷர்கள் காணாத காட்சியை அவள் கண்டாள். இயேசுவின் தலைமாட்டில் ஒரு தூதனும் இயேசுவின் கால் பகுதியை வைத்த இடத்தில் ஒரு தூதனுமாக அவர்கள் இருவர் இயேசு உயிர்த்தெழுந்தார் என்பதை சொல்ல அங்கே இருந்தார்கள். உயிருள்ளவரை மரித்தோரிடத்தில் நீ ஏன் தேட வேண்டும் என்று தூதன் சொன்னான். அவளோ சிறுபிள்ளை போல அழுதாள். ஐயா என் ஆண்டவரை எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள். அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லை என்று சொன்னாள். எவ்வளவு உயிருக்கு உயிராக கணவன் மனைவி பின்னிப்பிணைந்து வாழந்தாலும் கணவன் மரித்த நாளிலே எவ்வளவு அழுதாலும் நேரம் செல்ல செல்ல மனைவியானவள் மற்றவர்களை பார்த்து அடக்கத்திற்கு ஒழுங்கு செய்து விட்டீர்களா என்று கேட்பாள். மரித்தவர்களை நம்மைவிட்டு தூரப்படுத்துகிற இந்த உலகத்தின் மத்தியிலே மரித்த ஒரு சரீரத்தை தேடி அதிகாலை இருட்டோடே

எழுந்து போய், எல்லோரும் போன பின்பும் தனித்தவளாக அந்த திறந்த கல்லறைக்கு முன்பாக அந்த ஸ்திரீ நின்று அழுது கொண்டிருந்தாளே, அவள் எதற்காக அழுது கொண்டிருந்தாள்? அவள் அழுகையின் நோக்கத்தை இயேசு அறிந்திருந்தபடியினாலே அவர் மாறுவேடத்தில் வந்து ஸ்திரீயே நீ யாரைத் தேடுகிறாய் என்று கேட்டார். அவளோ அவரைத் தோட்டக்காரர் என்று எண்ணி ஐயா நீர் அவரை எடுத்துக் கொண்டு போனதுண்டானால் அவரை வைத்த இடத்தைச் சொல்லும்.

நான் போய் அவரை எடுத்துக்கொள்கிறேன் என்றாள். செத்து போன சரீரம் இந்த மகதலேனா மரியாளுக்கு எதற்கு வேண்டும். இனி இயேசுவால் எந்த நன்மையும் கிடைக்காது இனி இயேசு எந்த அற்புதமும் செய்ய மாட்டார். எல்லோரும் அவ்வளவு தான் முடிந்தது என்று போய்விட்டார்களே, அற்புதமே செய்ய மாட்டார் இனி நன்மை கிடைக்காது. இனி மகிமை மேன்மை இல்லை. இனி நாம் நம்முடைய பிழைப்பை பார்ப்போம் என்று போய்விட்டார்களே. செத்து போன சரீரம் இந்த மகதலேனா மரியாளுக்கு எதற்கு? அவள் ஆதாயத்தை தேடாமல் இயேசுவை உண்மையாய் உருக்கமாய் தேடினாள். இயேசுவினால் வரும் ஆதாயத்தை அவள் தேடவில்லை.

வேதம் எத்தனையோ தேவ மனிதர்களை பக்தியுள்ள ஸ்திரீகளை அடையாளம் காட்டுகிறது. ஆனால் இந்த முழு வேத புத்தகத்திலும் ஆண்டவர் இதைக்குறித்ததான அறிவை என்னுடைய மனக்கண்களை திறந்து தந்தபடியினால் என்னுடைய இரண்டாவது மகளுக்கு மேக்டலின் என்ற பெயரை வைத்தேன். அவளை அந்த பெயர் சொல்லி அழைக்கும்போதெல்லாம் மகதலேனா மரியாளையே நான் அவளிடத்தில் பார்த்துக்கொண்டிருக்கிறேன். இயேசு எந்தவொரு நன்மையும் செய்யாமல், மரித்த இயேசுவின் சரீரத்தை தேடின ஒரு ஸ்திரீ இந்த உலகத்தில் உண்டே! அவளுக்கு முன்பாக நம்முடைய பக்தி எவ்வளவு கேவலமானது சிந்தித்து பாருங்கள். கொஞ்சம் சரீரத்தில் பலவீனம் வந்து விட்டால் இயேசுவே உமக்கு நேரமில்லை என்று சொல்லுகிறோம். கேட்டதை கொடுக்கவில்லையென்றால் நீர் எனக்கு வேண்டாம் நான் உம்மோடு பேச வரமாட்டேன் என்று சொல்லுகிறோம்.

ஆனால் இந்த மகதலேனா ஸ்திரீ எந்த பிரதிபலனையும் எதிர்பாராமல் இயேசுவையே தேடி அவரை பின்தொடர்ந்தாள். அதனால் தான் இயேசுவால் மறைந்திருக்க ஒளிந்திருக்க முடியவில்லை. அதனால் தான் மரியாளே என்று கூப்பிட்டார். ஐயோ இது என் நேசருடைய சத்தமல்லவா, இது என் ஆண்டவருடைய சத்தமல்லவா என்று உணர்ந்த மரியாள் ரபூனி என்று ஆண்டவரிடத்தில் ஓடினாள். என்னைத் தொடாதே நான் இன்னும் என் பிதாவினிடத்தில் செல்லவில்லை என்று ஆண்டவர் அவளைப் பார்த்து சொன்னார்.

பிரியமானவர்களே, இயேசு இந்த உலகத்திலே வெளிப்பட்ட நாளிலே அவருடைய இருதயத்திற்கு ஏற்றவளாக அந்த ஸ்திரீயை கண்டார். இன்றைக்கு இப்படிப்பட்ட உண்மை அன்புள்ளவர்களைத் தேடித்தான் ஆண்டவர் வந்திருக்கிறார். எந்த பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் என்னை உண்மையாய் நேசிக்கக் கூடிய இருதயம் இந்த உலகத்தில் உண்டா என்று தேடிக்கொண்டிருக்கிறார்.

இந்த உலக அன்பிற்காக இயேசுவையே வேண்டாம் என்று மறுதலித்த தம்பி, தங்கையே நீ தேவ கட்டளையை மீறிப் போனோயே, ஆண்டவரை மறந்து விட்டாயே, நீயாக வாழ்க்கை துணையை தேர்ந்தெடுத்து ஆண்டவரை துக்கப்படுத்துகிறாயே. ஏற்றதுணையை நான் உண்டாக்குவேன் என்று ஆண்டவர் சொல்லியிருக்க நீயாக ஒரு துணையை உண்டாக்க உன் இருதயம் துடிக்கிறதென்ன? நீ ஆவியிலே செத்து போனாயே. என்றோ இயேசு உன்னை விட்டு விலகி விட்டாரே. இன்றைக்கு உண்மை இருதயத்தை இயேசு தேடி வந்திருக்கிறார். எத்தனை பேர் இயேசுவுக்கு உங்கள் இருதயத்தை கொடுக்க சித்தமாயிருக்கிறீர்கள். நான் பலமணிநேரம் ஜெபிக்கப் போகிறேன் என்று எத்தனை மணி நேரம் ஜெபிக்க முயற்சி செய்தாலும் இயேசுவுக்கு உங்கள் மீது உள்ளான பிரியம் இல்லையென்றால் நீங்கள் பல மணிநேரம் இயேசுவோடு அமர்ந்திருக்க முடியாது. உன்னுடைய வார்த்தையில் உண்மையில்லை. உன்னுடைய நடக்கையில் எனக்கு பிரியமில்லை.

நீ ஜெபிக்கும் இடத்திலே தூங்கிக்கொண்டிரு என்று கன நித்திரையின் ஆவியை வரவழைத்து இயேசு உங்களை விட்டு கடந்து போய்விடுகிறார். இயேசு உங்கள் உதட்டில் பிறக்கிற வார்த்தையை அல்ல உங்கள் உள்ளத்தின் நினைவுகளையல்லவா உற்று கவனித்துப் பார்க்கிறார். ஜெபம் என்பது இருதயத்தில் அல்லவா உருவாகிறது. உன் வாழ்க்கையில் இருந்து பிறக்கிறதுதான் உண்மையான ஜெபம்.

நேரத்தை குறித்து வைத்து அந்த நேரத்தை பார்த்து ஐயோ இது என் ஆண்டவருக்கு கொடுக்கிற நேரமல்லவா என்று துடிதுடித்து கொண்டு இயேசுவை நோக்கி ஓடுகிற அந்த உண்மையான அன்பு, சரீரத்தில் பலவீனம் இருந்தாலும் வாழ்க்கையில் குறைவுகள் இருந்தாலும் இந்த இயேசு எனக்கு வேண்டுமென்று உண்மையான உத்தமமான இருதயத்தைதான் ஆண்டவர் தேடுகிறார். ஆண்டவர் நீங்கள் கேட்டதையும் கொடுப்பார். கேளாததையும் கொடுப்பார். ஆனால் ஆண்டவர் இன்றைக்கு பெருங்கூட்ட மக்கள் மத்தியிலே ஏமாற்றத்தைத் தான் சந்திக்கிறார். இயேசு உங்கள் இருதயத்தை பார்க்கக் கூடியவராக இருக்கிறார்.

எத்தனை காலம் உங்கள் தேவைகளையே நீங்கள் சொல்லிக்கொண்டிருப்பீர்கள்? உண்மையாக அவரை நேசிக்க முடியுமா? இதை வாசித்துக் கொண்டிருக்கிற உங்களை சந்திப்பதற்காகத் தான் இயேசு வந்திருக்கிறார். உண்மையாய் அவரை நேசித்து அவரை சந்தோஷப் படுத்துவோம்.

# பணித்தளச் செய்திகள்

## ஓடிசா மாநிலம்

### ஹட்டிகோனா பணித்தளம்

**ஹட்டிகோனா:**

- இங்கு ஞாயிறு தோறும் ஆராதனை மற்றும் இரவு ஜெபம் நடைபெற்று வருகின்றது. லூக்கோனா மண்டங்கி என்பவர் சரீரத்தினால் மிகவும் சுகவீனமாய் காணப்பட்டார். குறி சொல்லுகிறவர்களிடத்திலும், மந்திரவாதிகளிடத்திலும் அழைத்து சென்றார்கள். சுகமாகவில்லை. என்னை ஜெபிக்கும்படி அழைத்தார்கள். எண்ணெய் பூசி ஜெபம் செய்தேன். ஆண்டவர் இயேசு சுகம் கொடுத்தார்.
- ஹட்டி மண்டங்கி என்பவரும் சரீரம் மற்றும் தலைவலியினால் மிகவும் சுகவீனமாய் காணப்பட்டார். மருத்துவமனைக்கு சென்று மருந்து மாத்திரை சாப்பிட்டும் சுகமாகவில்லை. ஜெபித்த போது இயேசு சுகம் கொடுத்தார்.
- தாஸ் ஜீல்லாக்காரா என்ற சகோதரரும் வயிற்று வலியினால் சாப்பிட மற்றும் தூங்க முடியாமல் மிகவும் சுகவீனமாய் காணப்பட்டார். எண்ணெய் பூசி ஜெபம் செய்தேன். ஆண்டவர் இயேசு சுகம் கொடுத்தார்.
- மொஞ்சு மண்டங்கி பில்லிசூனிய போராட்டத்தினால் மனநிலை பாதிக்கப்பட்டு பைத்தியமாக உள்ளார். ஜெபிக்கும்படி அழைத்தார்கள். ஜெபித்து வந்தேன். ஆண்டவர் இயேசு நல்ல விடுதலை கொடுக்க ஜெபிக்கவும்.
- ஆக்ஜிமி பீர்பார்கா, பொத்மே ஜீல்லாக்காரா இவர்கள் சரீரத்தினால் சுகவீனமாய் காணப்பட்டார்கள். ஜெபித்தபோது ஆண்டவர் இயேசு விடுதலை கொடுத்தார்.
- ஈரானா மண்டங்கி என்பவர் அசுத்த ஆவியினால் மிகவும் அலைக்கழிக்கப்பட்டார். ஜெபிக்கும்படி அழைத்தார்கள். ஜெபித்தபோது ஆண்டவர் இயேசு விடுதலை கொடுத்தார். இவர்களுடைய குடும்பம் இரட்சிக்கப்பட ஜெபிக்கவும்.
- பீஜாகா ஜீல்லாக்காரா, சோனே பொதக்கா, கீத்தா மண்டங்கி இவர்கள் அநேக நாட்களாக சரீரம் மற்றும் தலைவலியினால் கஷ்டப்பட்டார்கள். ஜெபித்த போது ஆண்டவர் இயேசு சுகம் கொடுத்தார். தேவனுக்கே மகிமை!
- சாலோமி மண்டங்கி பில்லிசூனிய போராட்டத்தினால் அநேக நாட்களாக பைத்தியம் போலிருக்கிறார்கள். அவர்களுக்காக ஜெபம் செய்து வருகிறோம். ஆண்டவா இயேசு விடுதலை கொடுக்க ஜெபிக்கவும்.
- ஹட்டிகோனா விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர, புதிய விசுவாசிகள் சபைக்கு

வர, பின்வாங்கி போனவர்கள் மறுபடியும் சபைக்கு வரும்படியாக ஜெபிக்கவும்.

## முக்கந்தபூர் பணித்தளம்

**பாணிசத்திரம்:**

- பாணிசத்திரம் கிராமத்தில் விசேஷித்த உபவாச ஜெபம் நடைபெற்றது. 40 பேர் கலந்து கொண்டனர். விஜயோ என்ற தகப்பனார் சரீரத்தினால் சுகவீனமாய் காணப்பட்டார். எண்ணெய் பூசி ஜெபம் செய்து வந்தேன்.
- கடந்த நாட்களில் ஜோர்டி பஞ்சாயத்தில் சுவிசேஷம் அறிவித்தோம். பாமினிபின்டு, சுறுமி, டோலா சிக்காப்பாடி ஆகிய கிராமங்களில் கைபிரதி மற்றும் புதிய ஏற்பாடு கொடுத்து சுவிசேஷம் அறிவித்தோம். அஜ்ஜீ பாலாக்கா என்ற சகோதரி குடும்பத்தினர் இயேசுவை ஏற்றுக் கொண்டு பின்வாங்கி போயுள்ளனர். அவர்களுக்கு மறுபடியும் சுவிசேஷம் அறிவித்து ஜெபம் செய்து வந்தோம். சுறுமி என்ற கிராமத்தில எதிர்ப்புகள் உள்ளது. இந்த கிராம மக்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ள தொடர்ந்து இந்த கிராமத்தில் பின் தொடர்பணியை செய்ய ஜெபித்துக் கொள்ளவும்.
- லூன்ருகோனா கிராமத்தில் ஞாயிறு ஆராதனை நடைப்பெற்று வருகின்றது. புதன் கிழமை வேதபாட வகுப்பு, வெள்ளி இரவு ஜெபம் நடைப் பெற்று வருகின்றது. ஏஞ்சல் என்ற சகோதரி வேளை செய்துக் கொண்டிருக்கும்போது பெரிய மரகொப்பு மேலே விழுந்தபோது ஒரு சேதமில்லாமல் கர்த்தர் பாதுகாத்தார்.
- நரேந்திரோ என்பவருக்கு அசுத்த ஆவியின் போராட்டத்திலிருந்து ஆண்டவர் இயேசு விடுதலை கொடுத்துள்ளார். இவர் பரிபூரண விடுதலை பெற ஜெபித்துக் கொள்ளவும்.
- இந்த கிராமத்தில் கிரியை செய்கிற தற்கொலை ஆவியின் வல்லமை அழிக்கப்பட, மதுபானத்திற்கு அடிமையாயுள்ளவர்கள் விடுதலை பெறவும், புதிதாக அநேகர் இயேசுவை ஏற்றுக் கொள்ளவும், ஆலய கட்டுமான பணியின் தேவைகள் சந்திக்கப்படவும் விரைவில் கட்டி முடிக்கப்பட ஜெபித்துக் கொள்ளவும். விசுவாசிகளுடைய குடும்ப சமாதானத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளவும்.

**டீக்ரப்படா, சிட்க்கபங்கா:**

- இந்த கிராமங்களில் நடை பெறுகிற ஆராதனைகளுக்காக ஜெபித்துக் கொள்ளவும்.
- டீக்ரப்படா கிராமத்தில் நரேந்திரோ என்ற சகோதரருடைய மனைவிக்கு சுகப்பிரசவத்தை தேவன் கட்டளையிட்டார்.
- பக்கு என்ற சகோதரர் மருஅருந்தி அனுதினமும் மனைவியை அடித்து வருகிறார். இவர் மனந்திரும்பவும், இந்த கிராம மக்கள் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலைப் பெறவும் ஜெபிக்கவும்.
- சிட்க்கபங்கா கிராமத்தில் தொன்னு கொண்டாகிரி அசுத்த ஆவியின் போராட்டத்தில் மனநிலை பாதிக்கப்பட்டு மிகவும் மோசமாக காணப்பட்டார். அவர்கள் ஜெபிக்கும்படி அழைத்தார்கள். சுவிசேஷம் அறிவித்து ஜெபம் செய்தோம். இயேசு விடுதலை கொடுத்தார்.

தற்போது குடும்பமாக ஆராதனைக்கு வருகின்றனர். அவருடைய மனைவி ஜீம்மி கொண்டாகிரி என்ற சகோதரிக்கும் அசுத்த ஆவியின் போராட்டத்திலிருந்து விடுதலை பெற ஜெபிக்கவும். இந்த கிராமத்தில் ஆராதனை நடத்த எதிர்ப்புள்ளது. இந்த எதிர்ப்புகள் மறைய ஜெபிக்கவும்.

- கெஞ்சூரி என்ற கிராமத்தில் ஜோன்னி என்ற இளம் வாலிப சகோதரி பிசாசின் போராட்டத்தினால் வயிற்று வலியினால் மிகவும் கஷ்டப்பட்டாள். எண்ணெய் பூசி ஜெபம் செய்தோம்;. ஆண்டவர் இயேசு விடுதலை கொடுத்தார்.
- முக்கந்தபூர் பணித்தளத்தில் ஹட்டிகோனா கிராமத்தில் ஸ்தோத்திர பண்டிகை நடைபெற்றது. எல்லா ஊழியர்கள் மற்றும் விசுவாசிகள் கலந்து கொண்டனர். விசுவாசிகள் தங்கள் விளைச்சலில் சிறிது கர்த்தருக்கு நன்றி சொல்லி காணிக்கையாக படைத்தனர். நமது பணித்தள இயக்குநர் சகோ. T.ஞானசேகர் கர்த்தருடைய வார்த்தையை கொடுத்து விசுவாசிகளுடைய ஆசீர்வாதத்திற்காக ஜெபம் செய்தார்கள். தேவனுக்கே மகிமை!

## மாடா பணித்தளம்

**மாடா:**

- இங்கு ஞாயிறு தோறும் ஆராதனை நடைபெறுகிறது. வேதப்பாட வகுப்பு, உபவாச ஜெபம் நடைபெற்று வருகிறது.
- மாடா கிராமத்தில் ஆலய கட்டுமானப் பணி பாதியில் நிறுத்தப்பட்டுள்ளது. இது விரைவில் முடிக்கப்பட ஜெபியுங்கள்.

**கொண்டா:**

- பாசு கிரிஸானி மனைவி சுக்ரி கிரிஸானி ஆகியோர் புதிதாக ஆராதனைக்கு வருகின்றனர். இவர்கள் விடுதலையோடு கர்த்தரை ஆராதிக்கவும், அவருக்குள் நிலைத்திருக்கும் படியாகவும் ஜெபியுங்கள்.
- தேபேந்திரோ என்பவர் நமது விசுவாசி பந்து என்பவரது வீட்டில் சென்று எப்போதும் சண்டை போடுகிறார். மேலும் இவர் (தேபேந்திரா) மனநிலை சிறிது பாதிக்கப்பட்டவர். இவர் மனம் மாறவும் ஜெபிக்கவும்.

**சுறுமி:**

- இங்கு ஞாயிறு ஆராதனை உபவாச ஜெபம் நடைபெறுகிறது.
- ரமேஷ், நிர்க்கி, சாபி நிர்க்கி, கோரா பதோ, நொய்னா மேலும் சகோதரியின் கணவர் ஆராதனைக்கு வருவதில்லை. இவர் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.
- கெனுவா என்பவரது குடும்பத்தினருக்காக ஜெபிக்கவும். இவரது மகன் தொய்த்து என்பவர் பெற்றோர் வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் கஞ்சா வியாபாரம் செய்தார். இப்போது ஜெயிலில் உள்ளார். இவருக்கு விடுதலை கிடைக்க, இவர் பாவ உணர்வடைந்து இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

**ஜொலாபுட்: டவுன்கேப்:**

- அஜித் என்ற சகோதரன் நடக்க முடியாமல் கஷ்டப்படுகிறார். இவருக்கு கர்த்தர் சுகம் கொடுக்க ஜெபியுங்கள்.
- அஜித், தொசு, சீத்தா என்ற சகோதரிகள் ஞானஸ்நானம் பெறும்படி ஜெபியுங்கள்.

# உலகச் செய்திகள்

1. தூத்துக்குடியில் இருந்து இலங்கை தமிழர்களுக்கு அத்தியாவசிய பொருட்களை விரைந்து அனுப்புவதற்கு வசதியை செய்து தர வேண்டும் என்று மத்திய அரசுக்கு, முதல் - அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.
2. இலங்கையில் அவசர நிலை அமல்படுத்தப்பட்டுள்ளது. ஊரடங்கும் போடப்பட்டதால் கொழும்பு வீதிகளில் ராணுவம் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டது. தேசிய அரசு அமைக்க அதிபருக்கு நெருக்கடி வலுக்கிறது.
3. உக்ரைனில் ரஷ்ய படைகள் ஆக்கிரமித்த நகரங்களில் பொது மக்கள் கொடூரமாக கொல்லப்பட்டு, உச்சகட்ட போர் குற்றங்கள் நடந்தது வெளிச்சத்துக்கு வந்துள்ளது. இதுவரை 410 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ரஷ்ய வீரர்கள் கசாப்பு கடைக்காரர்களாக மாறிவிட்டதாக ஜெலன்ஸ்கி குற்றம்சாட்டி உள்ளார்.
4. ஏவுகணை சோதனையையொட்டி விமர்சித்த தென்கொரியாவுக்கு வட கொரியா கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது. அந்த நாடு பேரழிவை தவிர்க்குமாறு கூறி உள்ளது.

**செய்திகளுக்காக ஜெபிப்போம்!**

## காணிக்கை அனுப்புவோர் கவனத்திற்கு...

உங்கள் காணிக்கைகளை M.O/ D.D / Cheque மூலமாக
"CALVARY GOSPEL MISSIONARY MOVEMENT" என்ற பெயரில் அனுப்பவும்.

வங்கி முகவரி: **INDIAN OVERSEAS BANK**, SATTANKULAM,
CALVARY GOSPEL MISSIONARY MOVEMENT.

Account No: **012401000017528.**

Branch IFS Code No: **IOBA0000124**

G Pay **93378 19993**
**T.ASIR GNANARAJ**

## தொடர்பு கொள்ள வேண்டிய அலைபேசி எண்கள்

| | |
|---|---|
| கோவை | – 94865 88270 |
| சென்னை | – 81909 25800 |
| திருச்சி | – 94886 34482 |
| மேட்டுப்பாளையம் | – 98435 80077 |
| ஈரோடு | – 99434 46728 |
| ஓசூர் | – 90369 43712 |
| திருவள்ளூர் | – 94451 49642 |
| பெங்களூரு | – 90369 43712 |
| தாராபுரம், பொள்ளாச்சி | – 98435 80077 |
| வெள்ளகோவில் | – 94865 88270 |
| ஒட்டன்சத்திரம் | – 75984 03162 |

Owned and Published by: T.Asir Gnanaraj from 6/128, Mudalur, Toothukudi District - 628 702
and Printed by : G.David at Divine Offset, 116-C, New Western Building, Old Bus Stand, Tisaiyanvilai - 627657. Editor: T.Asir Gnanaraj.



# ஆலயமில்லாத விசுவாசிகள்

பொய்பாரி குடா பணித்தளம் - கோராபுட் மாவட்டம்



Registered Newspaper RNI No. TNTAM/03/15637
Date of publication on 10.04.2022. Posted at Mudalur P.O. on 14th and 15th of every month.

முதலூரில்...

# எழுப்புதல் உபவாச ஜெபம்



## 07.05.2022

**சனிக்கிழமை**

காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை

**எழுப்புதல் ஜெப மையம்,**
**முதலூர்**

தேவ செய்தி

சகோ.
## T. ஆசீர் ஞானராஜ்

*ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!! தேவாசீர்வாதம் பெற்றுச் செல்லுங்கள்!!!*

To,

If Undelivered Please return to

**Bro. T.Asir Gnanaraj**
Calvary Gospel Missionary Movement,
Mudalur, Tuticorin District - 628 702.
**Phone: 04639 - 261498**
**Mobile: + 91 94865 88270**